திட்டத்தின் கீழ் நீர் வழங்கல் திட்டங்களும், இதில் அடங்கும். தண்ணீர் பற்றுக்குறை உள்ள இடங்களிலும், இடர்ப்பாடான பகுதி களிலும் சாதாரண கிணறுகள் வெட்டுவதற்கான திட்டத்தின் கீழ் ரூ. 2 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில், 1970 பிப்ரவரி முதல் ஜூலை வரையிலான கால அளவில் ரூ. 12 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. எனினும், சிவகாசி, வேட்பக்கோட்டை, ஸ்ரீவில்லி புத்தூர், வத்திராயிருப்பு வட்டாரங்களில் இன்னமும் குடி நீர்ப் பற்றுக்குறை உள்ளதென்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள் ளார். எனவே, இந்த இடர்பாட்டை நீக்குவதற்காக இத்தலைப்பின் கீழ் மேலும் ரூ. 4, 11 லட்சம் வழங்க ஒப்பளிப்பு வழங்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இச்செயற் குறிப்பு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தகுந்த ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

4. அரசினர் தீர்மானங்கள்.

அவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, சட்டப்பேரவை யின் 21 (3) விதியின்படி, "அரசினர் மசோதாக்கள்" என்ற தலைப் பின்கீழ், இனம் 9—தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த மசோதா, இனம் 13—தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) மசோதா ஆகியவைகளை அதே தலைப்பில் இனம் 1—தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதாவுக்கு முன்பு எடுத்துக்கொள்ள வேண்டும். இனம் 6—தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகர–நாட்டுப்புற அமைப்பு மசோதாவை இனம் 12—தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) மசோதாவிற்குப் பிறகு எடுத்துக் கொள்ளவேண்டும்", என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

5. அறிக்கை அளித்தல்

அரசினர் உறுதிமொழிக் குழுவின் ஆறுவது அறிக்கை.

THIRU K. VINAYAKAM: Mr. Speaker, Sir, I have the honour to present the Sixth Report (Fourth Assembly) of the Committee on Government Assurances for the year 1970–71.

6. அரசினர் மசோதாக்கள்

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச்சீர்த்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர் களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.